# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதிய
பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.10.16 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 159.00 தபாற் செலவு : ரூபா 150.00

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2:** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையில் 167அ முதல் 167ர வரையிலான பிரிவுகளை உட்புகுத்துவதுடன் உட்புகுத்தப்பட்டவாறான பிரிவுகளின் சட்டப்பயனானது, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் அமைவிடத்திலிருந்து சாட்சிகளின் சான்றுரையையும் அது தொடர்பான கருமங்களையும் வசதிப்படுத்துவதாகும்.

**வாசகம் 3**: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்ட வணையைத் திருத் துவதுடன் அத்திருத்தமானது 167ஆ என்னும் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந்தன்மையினதாகும்.

## குடியியல் நடவடிக்கைமுறைச்
## சட்டக்கோவை (திருத்தம்)

ச.வ - ஓ. 10/2022

**(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**1.** (1) இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இதனகத்துப்பின்னர் “நியமிக்கப்பட்ட தேதி” எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறானதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், சட்டமூலமானது எத்தேதியன்று பாராளுமன்றச்சட்டமொன்றாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

101 ஆம் அத்தியாயத்தில் 167அ, 167ஆ, 167இ, 167ஈ, 167உ, 167ஊ, 167எ, 167ஏ, 167ஐ, 167ஒ, 167ஓ, 167ஔ, 167க, 167ங, 167ச, 167ஞ, 167ட, 167ண, 167த, 167ந, 167ப, 167ம, 167ய மற்றும் 167ர என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 167 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 167அ, 167ஆ, 167இ, 167ஈ, 167உ, 167ஊ, 167எ, 167ஏ, 167ஐ, 167ஒ, 167ஓ, 167ஔ, 167க, 167ங, 167ச, 167ஞ, 167ட, 167ண, 167த, 167ந, 167ப, 167ம, 167ய மற்றும் 167ர என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்: -

“பணிப்பு வழங்குவதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.

**167அ.** (1) பிரிவு 167 இன் மற்றும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நீதிமன்றமானது-

PL15937 - 470 (2026/09)

(அ) வழக்குக்கான எல்லாத் திறத்தவர் களினதும் உடன்பாட்டின்மேல்;

(ஆ) வழக்குக்கான திறத்தவரொரு வரினால் செய்யப்பட்ட விண்ணப் பத்தின்மேல்; அல்லது

(இ) வழக்கொன்றில் அதன் சொந்தப் பிரேரணையின்பேரில்,

மற்றும் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளுக் கமைய, சாட்சியொருவரின் விசாரணை தொலைவுப்புள்ளியிலுள்ள ஓர் அமைவிடத்தி லிருந்து சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

(2) நீதிமன்றமானது, சாட்சியொருவரின் விசாரணை சமகாலத்துக்குரிய கட்புல - செவிப்புல இணைப்பினூடாக நிறைவேற்றப் படுதல் வேண்டுமெனப் பணிக்குமுன்னர், திறத்தவர்களின் அல்லது சாட்சியின் எவையேனும் கரிசனைகளை அல்லது ஆட்சேபனைகளைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

(3) நீதிமன்றமானது,

(அ) நீதிநிருவாகத்தின் நலன்களுக்காக இருக்குமென்றும்;

(ஆ) நீதிமன்றப் புள்ளியில் வழக்குக்கான எவரேனும் திறத்தவருக்கு நியாயமற்றதாக இருக்காதென்றும்;

(இ) சாட்சியொருவரின் விசாரணை சமகாலத்துக்குரிய கட்புல - செவிப்புல இணைப்பினூடாக நிறைவேற்றப்படுமென எல்லாத்

திறத்தவர்களுக்கும் அறிவிக் கப்பட்டுள்ளதென்றும்; அத்துடன்

(ஈ) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பு கிடைக்கக் கூடியதாகவுள்ளதென்றும் அல்லது நியாயமானமுறையில் அதனைக் கிடைக்கக்கூடியதாக்க முடியுமென்றும்,

திருப்திப்பட்டாலொழிய, சாட்சியொருவரின் விசாரணை சமகாலத்துக்குரிய கட்புல - செவிப்புல இணைப்பினூடாக நிறைவேற்றப் படலாமென நீதிமன்றம் பணித்தலாகாது.

வழக்குக்கான எல்லாத் திறத்தவர் களினதும் உடன்பாடு.

**167ஆ.** (1) பிரிவு 167அ வின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் எல்லாத் திறத்தவர்களினதும் உடன்பாட்டின்மேல், தொலைவுப் புள்ளியிலுள்ள அமைவிடமொன்றில் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் சான்றையளிப்பதற்கு உட்கருதுகின்ற திறத்தவர், நீதிமன்றத்தின் பணிப்புக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்று சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் சான்றையளிக்கின்றமைக்கு சம்மதமளிக்கின்ற வழக்கின் எல்லாத் திறத்தவர்களினாலும் கையெழுத்திடப்பட்ட ஒரு பிரேரணையொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன், அது அத்தகைய சாட்சியின் பெயரையும், முகவரியையும், இலத்திரனியல் அஞ்சல் முகவரியையும்,

தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் அல்லது கடவுச்சீட்டிலக்கத்தையும், தொலைபேசி இலக்கத்தையும், மொழியையும், சாட்சியின் அமைவிடத்தையும் மற்றும் சமகாலத்துக்குரிய கட்புல - செவிப்புல இணைப்பினூடாக எந்தத் தொலைவுப் புள்ளியிலுள்ள அமைவிடத்திலிருந்து சான்று அளிக்கப்பட வேண்டுமோ அந்தத் தொலைவுப் புள்ளியிலுள்ள அமைவிடத்தையும், அத்துடன் சமகாலத்துக்குரிய கட்புல - செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் விசாரணையை ஒருங்கிணைப்பதற்குப் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய ஆளின் பெயரையும், முகவரியையும், இலத்திரனியல் அஞ்சல் முகவரியையும், தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் அல்லது கடவுச்சீட்டிலக்கத்தையும், தொலைபேசி இலக்கத்தையும் உள்ளடக்குதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட பணிப்பின்மேல், சமகாலத்துக்குரிய கட்புல - செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் விசாரணையை ஒருங்கிணைப்பதற்கு ஆளொருவரைப் பெயர்குறித்து நியமிப்பதற்கு வழக்குக்கான திறத்தவர்கள் உடன்படுமிடத்து, தொலைவுப் புள்ளியிலுள்ள ஆணையாளராக நீதிமன்றம் அத்தகைய ஆளை நியமிக்கலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட பணிப்பின்மேல், -

(அ) ஆணையாளரொருவர் நியமிக்கப்படாமல் இலங்கைக்கு வெளியேயுள்ளவொரு தொலைவுப் புள்ளியில் சமகாலத்துக்குரிய கட்புல - செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரை விசாரணை செய்வதற்கு, வெறுமனே வழக்குக்கான திறத்தவர்களின் வசதிக்காகவல்லாமல், சில செல்லுபடியான காரணங்களுக்காகத் திறத்தவர்கள் எழுத்தில் உடன்பட்டிருக்குமிடத்தும்; அத்துடன்

(ஆ) அத்தகைய தொலைவுக் கேட்புக்கான குறிப்பிட்ட ஒழுங்கேற்பாடுகள் தொடர்பாகத் திறத்தவர்களுடனான விதிமுறைப்பட்ட கேட்பின் மேலும், விளக்கத்தினது வழக்கு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த நியாயத்தன்மை, சாட்சியின் ஆளடையாளம், அமைவிடம், தரவுப் பாதுகாப்பு மற்றும் அந்தரங்கத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான பணிப்புக்களுக்கமையவும், ஆணையாளரொருவர் நியமிக்கப்படாமல் அத்தகைய சாட்சியை விசாரணை செய்வது தோதானதும் நியாயமானதுமென நீதிமன்றம் திருப்திப்படுமிடத்தும்,

நீதிமன்றம் ஆணையாளரொருவர் நியமிக்கப்படாமல், அதன் மேற்பார்வையின் கீழும் பணிப்புக்களின் கீழும் இலங்கைக்கு வெளியேயுள்ள ஒரு தொலைவுப்புள்ளியிலுள்ள சமகாலத்துக்குரிய இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் விசாரணையை அனுமதிக்கலாம்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் விடுக்கப் பட்ட பணிப்பின்மேல், வழக்குக்கான திறத்தவர்கள் அத்தகைய ஆளைப் பெயர் குறித்து நியமிப்பதற்குத் தவறுமிடத்து, நீதிமன்றமானது, அடுத்துவரும் உட் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் விசாரணையை ஒருங்கிணைப்பதற்குத் தொலைவுப் புள்ளியிலுள்ள ஆணை யாளரை நியமித்தல் வேண்டும்.

(6) எந்தச் சாட்சி சான்று அளிக்கப்பட வேண்டுமோ அந்தச் சாட்சியொருவர் ஒரு அரசாங்க நிறுவனமொன்றின் ஊழியரொருவராகவிருக்குமிடத்தும், அளிக்கப்படவேண்டிய சான்று அத்தகைய ஊழியருக்கு குறித்தளிக்கப்பட்ட அலுவலக முறையான கடமை தொடர்பாகவுள்ள விடத்தும், சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல வசதியானது அத்தகைய ஊழியர் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஓர் அரசாங்க நிறுவனத்தில் கிடைக்கக்கூடியதாகவிருக் குமிடத்தும், அரசாங்க நிறுவனத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் அல்லது அத்தகைய நிறுவனத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட அத்தகைய வேறு அலுவலர் ஆணையாளராகவிருத்தல் வேண்டும்.

(7) எந்தச் சாட்சியின் சான்று அளிக் கப்படவேண்டியுள்ளதோ அந்தச் சாட்சி யொருவரின் அமைவிடம் இலங்கைக்கு வெளியே உள்ளவிடத்து, நீதிமன்றமானது -

(அ) இலங்கைக்கு வெளியேயுள்ள தொலைவுப் புள்ளியிலுள்ள அத்தகைய அமைவிடத்தில் இலங்கையின் உயர் ஸ்தானிகராலயத்தின், தூதரகத்தின் அல்லது காவற்றூதலுவலகத்தின் இராஜதந்திர அலுவலரொருவரை இலங்கைக்கு வெளியே தொலைவுப்புள்ளியிலுள்ள ஆணையாளராக நியமிக்கலாம்; அல்லது

(ஆ) உயர் ஸ்தானிகராலயம், தூதரகம் அல்லது காவற்றூதலுவலகம் எதுவும் இல்லாதவிடத்தும், அல்லது இராஜதந்திர அலுவலர் எக்காரணத்துக்காகவேனும் நியமிக்கப்படாதவிடத்தும், வழக்குக்கான எந்தத் திறத்தவருக்கு அத்தகைய பணிப்பு வழங்கப்படுகின்றதோ வழக்குக்கான அந்தத் திறத்தவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவரை இலங்கைக்கு வெளியே தொலைவுப்புள்ளியொன்றில் ஆணையாளராக நியமிக்கலாம். அத்தகைய ஆள் ஒரு சட்ட நீதிமன்றத்தின் முன்னர் தொழில் புரிவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற ஆளொருவராக ஒரு சத்திய ஆணையாளராக அல்லது பிரசித்த நொத்தாரிசுவாக அல்லது அத்தகைய வெளிநாட்டு நியாயாதிக்கத்தில் சமமான பதவியொன்றை வகிக்கின்ற ஆளொருவராக, இருத்தல் வேண்டும். பெயர் குறித்த நியமனத்தைச் செய்கின்ற திறத்தவர் ஆணையாளராக நியமிக்கப்பட வேண்டிய ஆளின்

பெயரையும், முகவரியையும், தொலைபேசி இலக்கத்தையும் அல்லது இலத்திரனியல் அஞ்சல் முகவரியையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(8) ஆணையாளரின் நியமனமானது, பொருளளவில் இச்சட்டக்கோவைக்கான முதலாம் அட்டவணையிலுள்ள 39அ என்னும் இலக்கப் படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(9) நீதிமன்றப் பதிவாளர் அல்லது நீதிமன்றத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவர் நீதிமன்றப் புள்ளியில் நீதிமன்ற அலுவலராகவிருத்தல் வேண்டும்.

சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான்று அளிப்பதற்கு அல்லது சாட்சியொருவரை விசாரணை செய்வதற்குத் திறத்தவரொருவரினாலான ஒருபுடை விண்ணப்பம்.

**167இ.** (1) பிரிவு 167அ இன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியின் சான்றையளிப்பதற்கு உட்கருதுகின்ற திறத்தவரொருவர், தொலைவுப்புள்ளியிலுள்ள ஓர் அமைவிடத்திலிருந்து சான்றளிக்கின்ற சாட்சியை அடையாளங்காணல் தொடர்பாக, அத்தகைய சாட்சியின் பெயர், முகவரி, இலத்திரனியல் அஞ்சல் முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டிலக்கம், தொலைபேசி இலக்கம் மற்றும் மொழி அத்துடன் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான்றானது தொலைவுப்புள்ளியிலுள்ள எந்த அமைவிடத்திலிருந்து அளிக்கப்படவுள்ளதோ அந்த அமைவிடம் என்பன உட்பட்ட விபரங்களைக் கொண்டுள்ள அறிவித்தலை எதிர்க்கின்ற திறத்தவருக்குக் கொடுத்தபின்னர்

அமைவிடமொன்றிலுள்ள சாட்சியின் சான்றைச் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அளிப்பதற்கு நீதிமன்றத்தின் பணிப்புக்காக எழுத்திலானவொரு பிரேரணை என்றவகையாக நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) அத்தகைய விண்ணப்பத்தைக் கவனத்துட் கொள்வதன்மேல், நீதிமன்றம் அவ்விண்ணப்பத்தை அனுமதிக்க முடிபு செய்யுமிடத்து, நீதிமன்றமானது தொலைவுப் புள்ளியிலுள்ள ஆணையாளரையும் நீதிமன்றப் புள்ளியிலுள்ள நீதிமன்ற அலுவலரையும் நியமித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான பணிப்பு வழங்கப்படுவதன்மேல், சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியின் சான்றையளிப்பதற்கு உட்கருதுகின்ற திறத்தவர், தொலைவுப்புள்ளியிலுள்ள சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் விசாரணையை ஒருங்கிணைப்பதற்கு ஆளொருவரின் பெயர், முகவரி, இலத்திரனியல் அஞ்சல் முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டிலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) பிரிவு 167ஆ வின் உட்பிரிவுகள் (3), (5), (6), (7), (8) மற்றும் (9) என்பவற்றின் ஏற்பாடுகள், ஆணையாளரினதும் நீதிமன்ற அலுவலரினதும் நியமனத்துக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

நீதிமன்றம் அதன் சொந்தப் பிரேரணையின் பேரில் பணிப்பு விடுத்தல்.

**167ஈ.** (1) தொலைவுப்புள்ளியிலுள்ள அமைவிடமொன்றிலிருந்து சம காலத்துக் குரிய கட்புல-செவிப்புல இணைப் பினூடாகச் சாட்சியொருவரின் சான்று அளிக்கப்படவேண்டுமென 167அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் சான்றையளிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும் படி திறத்தவரை அது பணிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விடுக்கப் பட்ட பணிப்பின்மேல், நீதிமன்றமானது, தொலைவுப் புள்ளியிலுள்ள ஆணை யாளரையும் நீதிமன்றப் புள்ளியிலுள்ள நீதிமன்ற அலுவலரொருவரையும் நியமித்தல் வேண்டும்.

(3) பிரிவு 167ஆ வின் (5), (6), (7), (8) மற்றும் (9) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், ஆணையாளரினதும் நீதி மன்ற அலுவலரினதும் நியமனத்துக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஒரு சாட்சியின் சுகவீனம் அல்லது உடற்குறைபாட்டின் விடயத்தில்.

**167உ.** பிரிவு 167ஆ, 167இ அல்லது 167ஈ இன்கீழ் நீதிமன்றமானது பணிப்பொன்றை வழங்கியுள்ளவிடத்தும் சாட்சியொருவர் சுகவீனம் அல்லது உடற்குறைபாடு காரணமாக நீதிமன்றத் துக்கு வருகைதர இயலாதவராகவுள்ளா ரென நீதிபதி திருப்திப்படுமிடத்தும், ஆணையாளர், நீதிபதியின் ஏதேனும் மேற்கொண்ட பணிப்பிற்கமைய,

சாட்சி வதிகின்ற வீட்டுக்கு அல்லது வேறேதேனும் இடத்துக்கு விஜயம் செய்யலாமென்பதுடன், சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அத்தகைய சாட்சியின் விசாரணையை ஒருங்கிணைக்கலாம்.

ஆணை வழங்குதல்.

**167ஊ.** (1) நீதிமன்றமானது-

(அ) இச்சட்டக்கோவைக்கான முதலாம் அட்டவணையிலுள்ள 39ஆ என்னும் இலக்கப் படிவத்தில், ஓர் அரசாங்க நிறுவனத்தின் ஊழியரொருவராக விராத சாட்சியொருவரின் விடயத்தில், பதிவஞ்சல், விரைதூதர் சேவை அல்லது இலத்திரனியல் வழிவகைகள் என்ற வகையாக இலங்கையினுள் தொலைவுப் புள்ளியிலுள்ள அத்தகைய ஆணையாளருக்கு ஆணையொன்றை வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச்சட்டக்கோவைக்கான முதலாம் அட்டவணையிலுள்ள 39இ என்னும் இலக்கப் படிவத்தில், பதிவஞ்சல், விரைதூதர் சேவை, இலத்திரனியல் வழிவகைகள் என்ற வகையாக அல்லது ஓர் இராஜதந்திர தூதுக்குழுவினூடாக அல்லது மத்திய அதிகாரியூடாக இலங்கைக்கு வெளியே தொலைவுப் புள்ளியிலுள்ள அத்தகைய ஆணையாளருக்கு ஆணையொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) எந்தச் சாட்சியின் சான்று சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அளிக்கப்படுவதற்கு நாடப்படுகின்றதோ அந்தச் சாட்சி யொருவர் ஓர் அரசாங்க நிறுவனத்தின் ஊழியரொருவராகவுள்ளவிடத்து, அத்தகைய ஆணை, நிறுவனத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அல்லது அரசாங்க நிறுவனத்திற்கு பொறுப்பான அலுவலரினால் பெயர் குறித்துநியமிக்கப்பட்ட அத்தகைய வேறு அலுவலருக்கு பதிவஞ்சல், விரைதூதர் சேவை அல்லது இலத்திரனியல் வழிவகைகள் என்றவகையாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆணையின் பிரதியொன்று, எந்தச் சாட்சியின் சான்று சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அளிக்கப் படுவதற்கு நாடப்படுகின்றதோ அந்தச் சாட்சிக்கு, அத்தகைய சாட்சிக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டிய அழைப்புக் கட்டளையுடன்சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

சமகாலத்துக் குரிய கட்புல-செவிப்புல இணைப் பினூடாக விசாரிக்கப்படவுள்ள சாட்சியொருவருக்கு உதவுவதற்கு மொழி பெயர்ப்பாளர்கள், உரை பெயர்ப் பாளர்கள் முதலியவர்களை நியமித்தல்.

**167எ.** (1) நீதிமன்றமானது, திறத்த வரொருவரினாலான ஏதேனும் விண்ணப் பத்தின்மீது அல்லது அதன் சொந்தப் பிரேரணையின்மீது, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக விசாரணை செய்யப்படவுள்ள சாட்சியொருவருக்கு உதவுவதற்குப் பின்வரும் ஆட்களை நியமிக்கலாம்:-

(அ) விசாரணை செய்யப்படவுள்ள சாட்சி நீதிமன்றமொழியுடன் பரிச்சயமற்றவராகவுள்ளவிடத்து மொழிபெயர்ப்பாளரொருவர்;

(ஆ) விசாரணை செய்யப்படவுள்ள சாட்சி, செவிப்புல அல்லது பேச்சுக் குறைபாடுடைய வராகவுள்ளவிடத்து உரை பெயர்ப்பாளரொருவர்;

(இ) விசாரணை செய்யப்படவுள்ள ஆள் கட்புலக் குறைபாடுடைய வராகவுள்ளவிடத்து ஆவணங் களை வாசிப்பதற்கான நிபுண ரொருவர்; அல்லது

(ஈ) விசாரணை செய்யப்படவுள்ள சாட்சி தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக உளரீதியாக அல்லது உடல் ரீதியாகக் குறைபாடுள்ளவராக இருக்கு மிடத்து உரை பெயர்ப்பாளர் அல்லது மொழிபெயர்ப்பாளர் அல்லது விசேடமானமுறையில் பயிற்சி பெற்ற கல்விபுகட்டுநரொருவர்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப் பட்ட ஒரு மொழிபெயர்ப்பாளர், நிபுணர், உரைபெயர்ப்பாளர் அல்லது கல்விபுகட்டுநர், ஒரு மொழி பெயர்ப்பாளராக, நிபுணராக, உரைபெயர்ப்பாளராக அல்லது கல்விபுகட்டுநராக அவரது கடமைகளைப் புரிவதற்குத் தகைமைபெற்ற ஆளொருவராக இருத்தல் வேண்டும்.

அவதானிப் பாளரை நியமித்தல்.

**167ஏ.** (1) நீதிமன்றமானது, மற்றைய திறத்தவருக்கான ஒரு பிரதியுடன் அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, இலங்கையினுள்ளான தொலைவுப் புள்ளியில் சட்டத்தரணியொருவராக இருக்கவேண்டியவரை அல்லது இலங்கைக்கு வெளியேயான தொலைவுப் புள்ளியிலுள்ள

சாட்சியொருவரை விசாரணைசெய்யும் விடயத்தில், அத்தகைய வெளிநாட்டு நியாயாதிக்கத்திலுள்ள சட்ட நீதிமன்ற மொன்றின் முன்னர் தொழில்புரிவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற எவரேனுமாளை அவதானிப்பாள ரொருவராக பெயர்குறித்து நியமிப் பதற்கு எதிர்க்கின்ற திறத்தவரை அனுமதிக்கலாம்.

(2) விண்ணப்பம் அனுமதிக்கப் படுவதன்மேல், விண்ணப்பகாரர், அவதானிப்பாளரின் பெயரையும் ஏனைய விபரங்களையும் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

ஆவணங்கள், எழுத்துருக்கள் அல்லது காண்பி பொருட்களைப் பகிர்தலும் முன்வைத்தலும்.

**167ஐ.** இலத்திரனியல் ஆவணங்கள், எழுத்துருக்கள் அல்லது காண்பிபொருட்கள் என்பனவுட்பட ஆவணங்கள் பயன்படுத்தப்படவுள்ளவிடத்து, அத்தகைய ஆவணங்களை, எழுத்துருக்களை அல்லது காண்பிபொருட்களை விதிமுறைப்பட்டமுறையில் பகிர்வதற்கும் முன்வைப்பதற்குமான தோதான ஊடகமொன்று, ஒரு சாட்சியின் விசாரணைக்குமுன்னர் அல்லது அதன்போது, திறத்தவர்களினால் உடன்பட்டுக் கொள்ளப்பட்டு ஒழுங்கேற்பாடு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் திறத்தவர்கள் உடன்படத் தவறுமிடத்து, நீதிமன்றம் அவசியமான கட்டளைகளை ஆக்கலாம்.

கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியின் விசாரணைக்காகத் தொலைவுப் புள்ளியிலான ஒரு தேதியையும், நேரத்தையும், அமைவிடத்தையும் நிர்ணயித்தல்.

**167ஒ.** (1) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் சான்றையளிப்பதற்கு நீதிமன்றம் பணிக்குமிடத்து, நீதிபதி, விடயத்துக்கேற்ப, ஆணையாளரின், நீதிமன்ற அலுவலரின் மற்றும் திறத்தவர்களின் உடன்பாட்டுடன் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அச்சாட்சியின்

சான்றை விசாரிப்பதற்காகத் தொலைவுப் புள்ளியிலான ஒரு தேதியையும், நேரத்தையும், அமைவிடத்தையும் நிர்ண யித்தல் வேண்டும்.

(2) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியை அழைக்கின்ற எவரேனும் திறத்தவர், (1) ஆம் உட்பிரிவிற்கிணங்க நிர்ணயிக்கப்பட்ட தொலைவுப்புள்ளியிலான ஒரு தேதியையும், நேரத்தையும், அமைவிடத்தையும் உடனடி யாகச் சாட்சிக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான தேதியொன்று நிர்ணயிக்கப்பட்டதன்மேல், நீதிமன்றம் தொலைவுப்புள்ளியிலான தேதியையும், நேரத்தையும், அமை விடத்தையும் அறிவித்து இலங்கையினுள் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான்றளிக்கவுள்ள சாட்சிக்கு அழைப்புக்கட்டளை சேர்ப் பிக்கும்படி பணிக்கலாம்.

(4) ஆணையொன்றின் சேர்ப்பிப்புத் தொடர்பாகப் பிரிவு 167ஊ இன் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், இலங்கைக்கு வெளியே சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான் றளிக்கின்ற எவரேனும் சாட்சிக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பித்தலுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான்றளிப்பதற்கு அல்லது ஆவண மொன்றைக் காண்பிப்பதற்கு ஆளொரு வரின் வருகைக்கான ஒவ்வோர் அழைப்புக்கட்டளையும்-

(அ) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான்றளிக்கும் அல்லது ஓர் ஆவணத்தை காண்பிக்கும் நோக்கத்துக்காக, அல்லது இரு நோக்கங்களுக்காகவும் அவர் வருகைதருவதற்குத் தேவைப் படுத்தப்படுகின்ற தொலைவுப் புள்ளியிலான தேதியையும், நேரத்தையும், அமைவிடத்தையும் குறித் துரைத்தல் வேண்டும்;

(ஆ) குறிப்பிட்ட ஏதேனும் ஆவணத்தைக் குறித்துரைத்து நியாயமான செம்மையுடன் அதனை விவரித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) ஆளடையாள விபரங்களுக்கான எண்பிப்புடன் சேர்த்து தொலைவுப்புள்ளியில் நேரடியாக வருகைதரும்படி சாட்சியைப் பணித்தல் வேண்டும்.

கட்புல-செவிப்புல இணைப் பினூடாக ஒரு சாட்சியின் விசாரணையில் பங்கு பற்றுவோர்.

**167ஓ.** (1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கட்புல-செவிப்புல இணைப்பினூடாக சாட்சியொருவரின் விசாரணையில் வழக்குநடவடிக்கைகள் நீதிமன்றத்தில் உருப்படியாக நடாத்தப்படும் ஏதேனும் வழக்கு நடவடிக்கைகள் போல பகிரங்கமாக நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) பின்வரும் ஆட்கள் நீதிமன்றப் புள்ளியில் சமுகமளிப்பதற்கு உரித்துடைய வராதல் வேண்டும்: -

(அ) வழக்கிற்கான திறத்தவர்கள் அல்லது அவர்களின் சட்டத் தரணிகள் அல்லது அத்தகைய திறத்தவர்களும் அவர்களின் சட்டத்தரணிகளும்;

(ஆ) 167எ(1) என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மொழிபெயர்ப் பாளர், உரைபெயர்ப்பாளர், நிபுணர்கள் அல்லது விசேடமான முறையில் பயிற்சிபெற்ற கல்வி புகட்டுநர் அல்லது அவர்கள் அனைவரும்; அத்துடன்

(இ) சாட்சியொருவரின் விசாரணைக் கான தேதி மற்றும் நேரத்தை தீர்மானிக்கின்ற நேரத்தில் நீதிபதியினால் அனுமதிக்கப்பட்ட எவரேனும் ஆள்.

(3) பின்வரும் ஆட்கள் தொலைவுப் புள்ளியில் சமுகமளிப்பதற்கு உரித்துடை யோராதல் வேண்டும்: -

(அ) ஆணையாளரும் ஆணையாள ருக்கு உதவுகின்ற எவரேனும் தொழினுட்ப அலுவலரும்;

(ஆ) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒன்றில் சான்றளிப்பதற்கு அல்லது ஆவணங்களைக் காண்பிப்பதற்கு அவரது வருகை தேவைப்படுத்தப்படுகின்ற சாட்சி; அத்துடன்

(இ) நீதிமன்றத்தினால் அனுமதிக்கப் பட்ட அவதானிப்பாளரொருவர்.

ஆணையாளரினதும் நீதிமன்ற அலுவலரினதும் கடமைகள்.

**167ஔ.** (1) நீதிமன்ற அலுவலருடன் ஒன்றிணைந்து சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக சான்றையளிப்பது உட்பட ஆனால் தொலைவுப்புள்ளியில் சாட்சியின் வருகையை உறுதிப்படுத்துவது மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கருமங்களுக்கு மட்டுப்படுத்தாது வசதிப்படுத்துவதற்கு

எல்லா அவசியமான ஒழுங்கேற்பாடுகளை செய்தலுக்கு ஆணையாளர் பொறுப்பாதல் வேண்டும்.

(2) நீதிபதியினால் வழங்கப்பட்ட எல்லாப் பணிப்புக்களும் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடான வழக்கு நடவடிக்கைகளின்போது இணங்கியொழுகப்படுவதனை உறுதிப் படுத்துதலும் தொலைவுப்புள்ளியில் வேறு பதிவெதுவும் இடம்பெறாதிருப்பதனை உறுதிப்படுத்துதலும் ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

(3) பிரிவு 167க இன் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆளொருவர், தொலைவுப்புள்ளியிலுள்ள சமகாலத்துக்குரிய கட்புல - செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் விசாரணையைப் பதிதலாகாது.

சமகாலத்துக் குரிய கட்புல - செவிப்புல இணைப் பினூடாகத் தொலைவுப் புள்ளியிலுள்ள அமைவிடமொன்றில் சான்றளிக்கும் போது எடுக்கப்பட வேண்டிய இடர் காப்புக்கள்.

**167க.** (1) நீதிபதியானவர், தொலைவுப் புள்ளியிலுள்ள ஆணையாளரின் உதவியுடன், ஆணையாளரெவரும் நியமிக்கப்படாதிருந்தாலொழிய, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக விசாரணை செய்யப்படவேண்டிய சாட்சியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் ஒரு சாட்சியின் விசாரணைக்காகச் சட்டத்துக்கும், நீதிமன்றச் செயல்முறைக்கும், நடவடிக்கைமுறைக்கும் இணங்க விசாரணைக்குமுன்னர் சாட்சிக்குச் சத்தியம் அல்லது உறுதியுரை ஒன்றை எடுத்தோதுதலும் வேண்டும்.

(2) தொலைவுப்புள்ளியிலுள்ள சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரினாலான சத்தியம் அல்லது உறுதியுரை மற்றும் அத்தகைய சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது அவரினால் அளிக்கப்பட்ட சான்று, நீதிமன்ற அவமதிப்பு நோக்கத்துக்காக உட்பட, சாட்சியொருவர் நீதிமன்றத்தில் உருப்படியாக நடாத்தப்படும் ஏதேனும் வழக்குநடவடிக்கையில் நேரடியாக சத்தியத்தைச் செய்கின்றார் அல்லது உறுதியுரையை மொழிகின்றார் மற்றும் சான்றளிக்கின்றார் என்றாற்போன்று கருதப்படுதல் வேண்டும்.

(3) சமகாலத்துக்குரிய கட்புல - செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சி யொருவரின் வாய்மொழி மூலமான சான்றுரை நீதிமன்றத்தில் உருப்படியாக நடாத்தப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கை போல நீதிபதியினால் அல்லது அவரது சமுகத்தில் நீதிமன்றப்புள்ளியில் எழுத்தில் பதியப்படுதல் வேண்டு மென்பதுடன் சாட்சியொருவரின் விசாரணையும் நீதிபதியின் எழுத்திலான பணிப்பொன்றின்கீழ் நீதிமன்றப்புள்ளியில் இலத்திரனியல்ரீதியில் பதியப்படுதலும் வேண்டும்.

(4) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியின் விசாரணை, சாதாரணமாக நீதிமன்ற வேலை மணித்தியாலங்களின்போது இடம்பெறுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், சூழ்நிலைகள் தேவைப்படுத்தக்கூடியவாறாகக் கட்புல-செவிப்புல இணைப்பினூடாக சாட்சியொருவரின் விசாரணை பற்றிய நேரம் குறித்தல்கள் தொடர்பாக நீதிமன்றம் பொருத்தமான பணிப்புக்களை வழங்கலாம்.

(5) நீதிமன்றப்புள்ளியும் தொலைவுப் புள்ளியும் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடான வழக்கு நடவடிக்கைகளின்போது விதிமுறைப்பட்ட நீதிமன்ற அமர்வொன்றாக அமைதல் வேண்டுமென்பதுடன் உயர்நீதிமன்றம், சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரை விசாரணைசெய்தல் தொடர்பான நடைமுறைகளை விதிக்கின்ற விதிகளை ஆக்கலாம்.

நீதிமன்றத்தின் வழமையான செயல்முறைக் கிணங்கச் சமகாலத்துக் குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியை விசாரணை செய்தல்.

**167ங.** (1) சமகாலத்துக்குரிய கட்புல- செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியை விசாரணை செய்தலானது, இயன்றளவு நெருங்கியமுறையில், நீதிமன்றத்தின் வழமையான செயல்முறைக்கிணங்க நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச்சட்டத்தினதும், 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தினதும் அல்லது சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான்றளிப்பதற்காக ஏற்பாடுசெய்கின்றதும் அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகள், அவை இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுவரை ஏற்புடையற்பாலனவாதலும் வேண்டும்.

(2) நீதிமன்றமானது, நீதிமன்றப் புள்ளியிலுள்ள சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடான வழக்கு நடவடிக்கைகளின்போது, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்புத் தொழினுட்பவியலின்மூலமும் பங்குபற்றுநர்களின் புவியியற்சார் தனிவேறாக்குதலின் மூலமும் உருவாக்கப்பட்ட மாற்றமடைந்த சூழலைக் கவனத்துட்கொண்டு, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான்றளித்தலானது, ஒரு நியாயமான மற்றும் பாரபட்சமற்ற விளக்கத்துடன் அல்லது திறத்தவர்களின் உரிமைகளுடன் தலையிடமாட்டாது அல்லது அவற்றைக் குறைவுபடுத்தமாட்டாது என்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தோதான பணிப்புக்களை விடுக்கலாம்.

சமகாலத்துக் குரிய கட்புல-செவிப்புல இணைப்பு செயலிழத்தல்.

**167ச.** (1) தொழினுட்ப இடையீடொன்று சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக வழக்கு நடவடிக்கைகளின்போது ஏற்படுமிடத்து, நீதிமன்ற அலுவலரும் ஆணையாளரும் அத்தகைய இடையீட்டை நிவர்த்தி செய்வதற்கும் இணைப்பை மீட்டெடுப்பதற்கும் செயன்முறைக்குகந்த விரைவாக எல்லா முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

(2) தொலைவுப்புள்ளியிலுள்ள சாட்சி அத்தகைய இடையீட்டின்போது ஏனைய பங்குபற்றுநர்களுடன் தொடர்பு கொள்ளாதிருப்பதனை ஆணையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இடையீட்டின்போது ஏனைய பங்குபற்றுநர்களுடன் சாட்சி தொடர்புகொள்வதனைத் தவிர்ப்பதற்கும்

இயன்றளவுவரை அவர்களின் நடமாட்டத்தை வரையறுப்பதற்குமான எல்லா நடவடிக்கைகளையும் அவர் எடுத்துள்ளாரென இணைப்பை மீட்டெடுத்தபின்னர் உடனடியாக நீதிமன்றப்புள்ளியிலுள்ள நீதிபதிக்கு அறிவித்தலும் வேண்டும்.

வழக்கு நடவடிக்கைகளுக்கான இடையீடு.

**167ஞ.** (1) வழக்கு நடவடிக்கைகளின்போது சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பு செயலிழக்குமிடத்தும், தொழினுட்பச் சிரமத்தை விரைவாக நிவர்த்திசெய்யமுடியாதிருக்குமிடத்தும், நீதிமன்றமானது வழக்கு நடவடிக்கைகளை ஒத்திவைக்கலாம் அல்லது வழக்கு நடவடிக்கைகளின் இடை நிறுத்துகையும் மீள்அட்டவணைப்படுத்துகையுமுட்பட, சூழ்நிலைகளில் தோதாகவுள்ளவாறான அத்தகைய வேறு கட்டளைகளை ஆக்கலாம்.

(2) நீதிபதி அவரது சொந்தப் பிரேரணையின் மீது அல்லது ஆணையாளரின் கோரிக்கையின்பேரில் அல்லது அத்தகைய இடையீட்டுக்குப் பின்னர் உடனடியாகச் செய்யப்பட்ட திறத்தவரொருவரின் விண்ணப்பத்தின்மீது, சான்றளித்தலானது தொழினுட்ப இடையீடு காரணமாகப் பாதகமானமுறையில் பங்கப்படுத்தப்பட்டுள்ளதெனத் திருப்திப்படின், அவர் சாட்சியொருவரின் விசாரணையை உடனடியாக இல்லாதாக்கி ஒன்றில் சாட்சியொருவரின் விசாரணையைச் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகப் புதிதாக நடாத்தலாம் அல்லது சாட்சியொருவரின் விசாரணையொன்று நீதிமன்றத்தில் உருப்படியாக நடாத்தப்பட வேண்டுமெனப் பணிக்கலாம்.

(3) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பு செயலிழந்தமை காரணமான ஒத்திவைப்பின் விடயத்தில், நீதியானதாகவிருக்கக்கூடியவாறாகச் செலவுதொகைகள்பற்றிய அத்தகைய கட்டளையை நீதிமன்றம் ஆக்கலாம்.

தொலைவுப் புள்ளியிலுள்ள ஆளொரு வருக்கு ஆவணங் களைப் பரிமாற்றுதல்.

**167ட.** பிரிவுகள் 167ஒ மற்றும் 167ஔ என்பவற்றில் விதிக்கப்பட்ட நடவடிக்கைமுறையுடன்சேர்த்து மேலதிகமாக, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடான தொலைப்புள்ளியொன்றிலுள்ள சாட்சியொருவரின் விசாரணையின்போது, தொலைவுப்புள்ளியிலுள்ள சாட்சிக்கு ஆவணமொன்றைக் காண்பிப்பது அவசியமாகவிருப்பின், நீதிமன்றம், ஏற்புடையற்பாலதான சட்டத்துக்கும் நடவடிக்கைமுறைக்கும் அமைய, பின்வரும் முறையில் ஆவணமானது சாட்சிக்குக் காண்பிக்கப்படுவதனை அனுமதிக்கலாம் -

(அ) ஆவணமானது நீதிமன்றப் புள்ளியிலிருப்பின், அத்தகைய ஆவணத்தின் பிரதியொன்று, ஓர் ஆவணக் காட்சிக்கருவியை அல்லது வேறெவையேனும் இலத்திரனியல் வழிவகைகளைப் பயன்படுத்துவதன்மூலம் சாட்சிக்குக் காண்பிக்கப் படுவதற்கு ஆணையாளருக்கு இலத்திரனியல் ரீதியில் நீதிமன்ற அலுவலரினால் கடத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) (i) ஆவணமானது தொலைவுப் புள்ளியிலிருப்பின், அத்தகைய ஆவணத்தின் பிரதியொன்று, ஓர் ஆவணக் காட்சிக் கருவியை அல்லது வேறெவையேனும்

இலத்திரனியல் வழிவகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நீதிமன்றத்துக்குக் காண்பிக்கப்படுவதற்கு ஆணையாளரினால் இலத்திரனியல் ரீதியில் நீதிமன்ற அலுவலருக்குக் கடத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) அத்தகைய ஆவணத்தின் சான்றுப்படுத்தப்பட்டவன்பிரதி உடனடியாக ஆணையாளருக்குக் கையளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் அத்தகைய ஆவணத்தை நீதிமன்றத்துக்குப் பதிவஞ்சல்மூலம் அல்லது விரைதூதர்மூலம் கடத்துதலும் வேண்டும்.

வழக்கு நடவடிக்கைகளில் சாட்சியைப் பாதுகாத்தல்.

**167ண.** இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடான வழக்கு நடவடிக்கைகளின்போது சாட்சியொருவர், நீதிமன்றத்தில் உருப்படியாக நடாத்தப்படும் ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் சாட்சியொருவருக்குள்ள அதே பாதுகாப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சான்றளிப்பதற்காகச் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பைப் பயன்படுத்துவதற்கான செலவுகள்.

**167த.** (1) ஒரு சாட்சியின் சான்று, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அளிக்கப்பட வேண்டுமென நீதிமன்றம் அதன் சொந்தப் பிரேரணையின்மீது பணிக்குமிடத்து, அத்தகைய கட்புல

-செவிப்புலக் கேட்புக்கான செலவு தொகைகள், நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலொழிய, நீதிமன்றத்தினால் பொறுக்கப்படலாம்.

(2) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான்றளிப்பதற்குச் சாட்சியொருவரை அழைப்பதற்கு நாடுகின்ற திறத்தவரொருவர், வேறு இடைநேர்விளைவான செலவுகளுட்பட, சாட்சியொருவரின் கட்புல-செவிப்புல விசாரணையொன்றின் எல்லாச் செலவுகளையும் செலுத்துதல் வேண்டும்:

ஆயின், எவரேனும் எதிர்க்கின்ற திறத்தவரினால் நியமிக்கப்பட்ட எவரேனும் அவதானிப்பாளருக்கான செலவுகளும் குறுக்கு விசாரணைக்காகத் தொலைவுப்புள்ளிக்கு ஆவணங்களை அனுப்புவதற்கான செலவுகளும் அத்தகைய எதிர்க்கின்ற திறத்தவரினால் பொறுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) தொழினுட்பவியல் நேரடி நீதிமன்ற அறை அல்லது நீதிமன்ற வளவுகளில் நிறுவப்பட்ட நீதிமன்றத்தின் தொழினுட்பவியற் சேவை அல்லது ஒப்பப்பண அடிப்படையின்மீது வேறெவரேனும் சேவை வழங்குநரினால் வழங்கப்பட்ட வேறேதேனும் தொழினுட்பவியற் சேவை ஏதேனும் நீதிமன்றத்தில் நிலைப் படுத்தப்பட்டுள்ளவிடத்து, நீதிமன்றம், ஒன்றில் முழுமையாக அல்லது பகுதியளவில் இலங்கையில் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பு வசதியின் பாவனைக்கான செலவுதொகைகளை இல்லாமற் செய்யலாம்.

(ஆ) நீதிமன்றமானது (அ) என்னும் பந்தியின்கீழ் பகுதியளவில் செலவு தொகைகளை இல்லாமற் செய்யுமிடத்து, விதிப்பனவுமுறையானது விதித்துரைக்கப் படக்கூடியவாறாக இருத்தல் வேண்டும்.

(4) நீதிமன்றம், ஆவணத்தின் எண்பிப்புக்கான சான்று நெறிப்படுத்தப் படுகின்றபின்னர் ஆவணத்தை ஏற்றுக்கொள்ளுமிடத்து, ஆவணத்தை ஆட்சேபிப்பதற்கு நாடிய திறத்தவர், நீதிமன்றம் நற்காரணத்துக்காக வேறு வகையாகப் பணித்தாலொழிய, வரிச்செலவு தொகையுடன்சேர்த்து மேலதிகமாக ஆவணத்தை எண்பிப்பதில் உறப்பட்ட செலவுதொகையைச் செலுத்து வதற்கு ஆளாதல் வேண்டும்.

ஆணையைத் திருப்பியனுப்புதல்.

**167ந.** ஆணை உரியமுறையில் நிறைவேற்றப்படுவதன்மேல், அத்தகைய ஆணை, ஆணையாளரினால் அவரது பெயருடன் கையொப்பமிடப்பட்டதும் நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட பணிப்புக்களுடனானதும், பணிப்பு களுக்கு இணங்கியொழுகுவதற்கு அவரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை களுடனானதுமான எழுத்திலான அவரது அறிக்கையுடன்சேர்த்து அத்தகைய ஆணையை வழங்கிய நீதிமன்றத்துக்கு திருப்பியனுப்பப்படுதல் வேண்டும்.

தொலைவுப் புள்ளியிலுள்ள சாட்சியின் சான்று பற்றிய பதிவேட்டின் எழுத்துப் படிவங்களும் காணொளிப் பதிவின் சான்றுப்படுத்தப்பட்ட எழுத்துப் படிவங்களுக்கான கோரிக்கைகளும்.

**167ப.** (1) பிரிவு 167ஞ இன் ஏற்பாடுகளுக்கமைய, பிரிவு 167க இன் நியதிகளின்படி பதியப்பட்ட சான்று, சான்றுரையின் அலுவலகமுறையான பதிவேடாக வருதல் வேண்டுமென்பதுடன் வழக்குக்கான எவரேனும் திறத்தவர் வழக்கு நடவடிக்கைகளின் எழுத்துப்படிவ மொன்றுக்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(2) வழக்குநடவடிக்கைகளின் எழுத்துப் படிவத்தினது உள்ளடக்கப்பட்ட மேம்பிரதி, பதிவாளரினால் பதிவேட்டின் பாகமாகத் தனிவேறாக நீதிமன்ற எண்ணிமச் சேவையகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், உள்ளடக்கப்பட்ட காப்புப்பிரதியொன்று வேறேதேனும் காப்பான அமைவிடத்தில் இருத்தலும் வேண்டும்.

(3) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புலப் பதிவின்போது திறத்தவரொருவர், சில மூலக்கூறுகள் சிறப்புரிமையளிக்கப்பட்டதாக அல்லது இரகசியமானதாக கருத்தப்படுகின்றதென அறிவிக்குமிடத்து, நீதிமன்றம் அது தொடர்பாகத் தோதான பணிப்புக்களை விடுத்தல் வேண்டும்.

(4) திறத்தவரொருவர் விண்ணப்பத்தின் மீது, நீதிமன்றத்தில் வைத்திருக்கப்பட்ட சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புலப் பதிவினூடான வழக்கு நடவடிக்கைகளின் எழுத்துப் படிவத்தின் மேம்பிரதியைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படலாமென்பதுடன் அத்தகைய விண்ணப்பம், பதிவாளரின் அல்லது நீதிமன்றத்தினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட அலுவலரொருவரின் முன்னிலையில் மட்டுமே மேம்பிரதி பார்வையிடப்படலாம் என்பதுட்பட்ட நிபந்தனைகளுக்கமைய, ஒவ்வொரு விடயமும் தனித்தனியானது என்ற அடிப்படையின்மீது நீதிபதியினால் முடிபு செய்யப்படுதலும் வேண்டும்.

(5) கட்புல - செவிப்புலப் பதிவினூடான வழக்குநடவடிக்கையின் எழுத்துவடிவ மேம்பிரதியின் பிரதியொன்று அல்லது சமகாலத்துக்குரிய வழக்கு

நடவடிக்கைகளின் காப்புப் பிரதியொன்று நீதிமன்றத்தினால் எவரேனும் திறத்தவருக்கு வழங்கப்படுதலாகாது.

தொலைவுப் புள்ளியிலுள்ள அமைவிடம் அல்லது வளவுகள் ஒரு நீதிமன்றத்தின் பாகமாகக் கருதப்படுதல்.

**167ம.** (1) இச்சட்டக்கோவையின் கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் சாட்சியொருவரின் சான்றையளிக்கும் நோக்கத்துக்காகச் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்புப் பயன்படுத்தப்படுகின்ற தொலைவுப் புள்ளியிலுள்ள அமைவிடமொன்று, இச்சட்டக்கோவையின் கீழான வழக்கு நடவடிக்கைகளை நடாத்தும் நோக்கத்துக்காக ஒரு நீதிமன்ற அறையில் அல்லது வேறு இடத்தில் அமர்கின்ற இலங்கை நீதிமன்றத்தின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக சாட்சியொருவரின் விசாரணையின்போது தொலைவுப்புள்ளியில் புரியப்பட்ட ஏதேனும்தவறு, இலங்கையில் வலுவிலுள்ள சட்டங்களின் நோக்கங்களுக்காக நீதிமன்ற அறையில் அல்லது நீதிமன்றம் அமர்கின்ற வேறு இடத்தில் புரியப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் சான்று, நடவடிக்கைமுறை, நீதிமன்ற அவமதிப்பு மற்றும் பொய்ச்சான்று என்பன தொடர்பான சட்டங்கள், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு நீதிமன்றத்தினால் நடாத்தப்பட்ட எல்லா வழக்கு நடவடிக்கைகளும் நீதிமுறை வழக்கு நடவடிக்கைகளாக

இருத்தல் வேண்டுமென்பதுடன் ஒரு உருப்படியான நீதிமன்றத்துக்கு ஏற்புடையற்பாலனவான எல்லா நயநாகரிகநடைகளும் செயல்முறைகளும், ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளிலான நடைமுறைகளுட்பட, இவ்வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

ஒழுங்குவிதி

**167ய.** அமைச்சர் பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் பின்வரும் கருமங்களுக்காக இச்சட்டக்கோவையின் 840 ஆம் பிரிவின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) சாட்சியொருவர் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக சான்றளிக்கவுள்ள விடத்து பயன்படுத்தப்பட வேண்டிய சாதன வகையையும் தொழினுட்பவியல் முறையையும், செய்யப்பட வேண்டிய ஒழுங்கேற்பாடுகளையும் விதித்துரைத்தும்; அத்துடன்

(ஆ) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பின் செலவு தொகையைக் கணக்கிடும் முறையையும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே அத்தகைய வழக்கு நடவடிக்கைகளுக்குச் சமகாலத்துக்குரிய கட்புல - செவிப்புல இணைப்பை வழங்குவதற்காக எவரேனும் வெளிநாட்டுச் சேவை வழங்குநருக்குச் செய்யப்பட வேண்டிய கொடுப்பனவு ஏதேனுமிருப்பின் அதனையும் விதித்துரைத்தும்.

பொருள் கோடல்

**167ர.** பிரிவுகள் 167அ முதல் இப்பிரிவு வரையிலானவற்றின் நோக்கத்துக்காக (இரண்டுமுட்பட),

"மத்திய அதிகாரி" என்பது, நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் என்று பொருள்படும்;

"சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பு" என்பது, பின்வருவனவற்றை இயலச் செய்கின்ற ஏதேனும் தொழினுட்பவியல் வசதி என்று பொருளாகும்: -

(அ) நீதிமன்றப்புள்ளியில் வழக்கு நடவடிக்கைகளில் பங்குபற்றுகின்ற ஆட்கள், சான்றளிக்கப்படுகின்ற தொலைவுப்புள்ளியிலுள்ள வழக்குநடவடிக்கைகளில் பங்குபற்றுகின்ற மற்றெல்லா ஆட்களையும் பார்த்தலும் கேட்டலும்; அத்துடன்

(ஆ) தொலைவுப் புள்ளியிலுள்ள வழக்கு நடவடிக்கைகளில் பங்கு பற்றுகின்ற எல்லா ஆட்களும் நீதிமன்றப்புள்ளியிலுள்ள வழக்குநடவடிக்கைகளில் பங்குபற்றுகின்ற ஆட்களைப் பார்த்தலும் கேட்டலும்;

"ஆணையாளர்" என்பது, பிரிவு 167ஆ, 167இ அல்லது 167ஈ இன் ஏற்பாடுகளின்கீழ் ஆணையாளராக நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட ஆளொருவரை உள்ளடக்கும்; அவர், சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகத் தொலைவுப்புள்ளியொன்றிலுள்ள

சாட்சியொருவரின் விசாரணையை ஒருங்கிணைத்தல் வேண்டும்;

"நீதிமன்ற அலுவலர்" என்பது, நீதிமன்றப் புள்ளியிலுள்ள நீதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரும் தொலைவுப்புள்ளியொன்றலிருந்து சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் விசாரணையையும் நீதிமன்றப் புள்ளியிலான பணிகளையும் ஒருங்கிணைப்பதற்கு ஈடுபடுத்தப் பட்டவருமான எவரேனும் நீதிமன்றப் பதிவாளரையும் அல்லது அலுவலரையும் உள்ளடக்கும்;

"நீதிமன்றப்புள்ளி" என்பது, நீதிமன்றம் உருப்படியில் அமர்ந்து ஒன்றில் பாரம்பரிய வழிவகைகள்மூலம் அல்லது சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சிகளின் சான்றைக் கேட்கின்ற நீதிமன்ற அறையைக் குறிப்பீடுசெய்கின்றது;

"ஆவணம்" என்பது, இச்சட்டக் கோவையின் அல்லது வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கருத்துக்குட்பட இலத்திரனியல் வடிவத்திலான ஏதேனும் ஆவணத்தையும் உள்ளடக்கும்;

"அரசாங்க நிறுவனமொன்றின் ஊழியர்" என்பது, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான்றளித்தல் தொடர்பில் பின்வருவோரை உள்ளடக்குகின்றது: -

(அ) ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவர் அல்லது வழக்கு நடவடிக்கையில் அல்லது முன்மொழியப்பட்ட வழக்கு நடவடிக்கையில் சான்றின் பயன்பாட்டிற்கென நிபுணரொருவரின் அறிக்கையை வழங்குகின்ற, அல்லது வழக்கு நடவடிக்கையில் அபிப்பிராயச் சான்றை அளிப்பதற்கு நிபுணரொருவராக அழைக்கப்படுகின்ற, ஏதேனும் அரசாங்கத்தில் தொழிலிலமர்த்தப்பட்ட அல்லது அரசாங்கத்தினால் ஈடுபடுத்தப்பட்ட ஆளொருவர்; அத்துடன்

(ஆ) அத்தகைய அரசாங்க நிறுவனத்தின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படும் அத்தகைய அரசாங்க நிறுவனத்தின் ஆவணமொன்றை கொடுப்பதற்கு அல்லது ஆவணமொன்றை ஒப்புறுதிப்படுத்த அழைக்கப்பட்ட ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் உறுப்பினரொருவர்;

“அரசாங்க நிறுவனம்” என்பது, சனாதிபதியின் செயலாளர் பதவி, பிரதம அமைச்சரின் செயலாளர் பதவி, அமைச்சரவையின் செயலாளர் பதவி, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் பதவிகள், நீதிச் சேவை ஆணைக்குழு, அரசியலமைப்புப் பேரவை, அரசியலமைப்பின் 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுக்கள், நிருவாகத்துக்கான பாராளுமன்ற

ஆணையாளர், பாராளுமன்றச் செயலாளர் நாயகம், அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள், மாகாணசபைகள், உள்ளூர் அதிகாரசபைகள், பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்துக்குரித்தாக்கப்பட்ட தொழில்முயற்சிகள் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் என்பவற்றையும் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எந்தக் கம்பெனிகளில் அரசாங்கம், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூர் அதிகாரசபை அக்கம்பெனியின் பங்குகளில் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பெனியையும் அரசாங்கத்தினால், மாகாணசபையொன்றினால் அல்லது உள்ளூரதிகார சபையொன்றினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது கட்டுப்படுத்தப்படும் ஏதேனும் வைத்தியசாலை, சுகாதார கவனிப்புச் சேவை வசதி, மருத்துவமனை,இயலாமைக்குட்பட்ட ஆட்களின் நிலையம், தடுப்பு நிலையம், மறியற்சாலை, சிறுவர் இல்லம், உறைவிட இல்லம், பாதுகாப்பு இல்லம், சிறுவர் கவனிப்பு நிலையம், விளக்கமறியல் இல்லம், மற்றும் சிறுவர் அல்லது இளம்பராய தவறாளர்களின் கவனிப்பு, பாதுகாப்பு அல்லது கட்டுக்காப்புக்கான ஏதேனும் நிலையம், இல்லம் அல்லது பாடசாலையையும் உள்ளடக்கும்;

“அமைச்சர்” என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின் கீழ் நீதி என்னும்

விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

"பதிவு" என்பது,-

(அ) தனியோர் உருவத்தின், ஓர் அசைகின்ற உருவத்தின் அல்லது ஏதேனும் ஒலியின்; அல்லது

(ஆ) அதிலிருந்து தனியோர் உருவம், ஓர் அசைகின்ற உருவம் அல்லது ஏதேனும் ஒலி தோற்றுவிக்கப்படக்கூடிய அல்லது மீளத்தோற்றுவிக்கப்படக்கூடிய,

ஏதேனும் ஊடகத்தின் மீதானவொரு பதிவு என்று பொருளாகும்;

"தொலைவுப்புள்ளி" என்பது, இலங்கையினுள் அமைந்துள்ள தாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே அமைந்துள்ளதாயினுஞ்சரி சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடான வழக்குநடவடிக்கைகளுக்காகச் சாட்சி விசாரணைசெய்யப்பட வேண்டிய இடம் என்று பொருளாகும்;

"தொழினுட்பவியல் உடன் நீதிமன்ற அறை" என்பது, பொதுமக்கள் அல்லது நீதிமன்றப் பாவனையாளர்கள் தொலைவுப் புள்ளியில் நடாத்தப்படுகின்ற அல்லது தொலைவுப்புள்ளியிலுள்ள வேறேதேனும் அமைவிடத்துடன் ஒலிபரப்பப்பட்டு வரிசைப்படுத்தப் பட்ட வழக்குநடவடிக்கைகளைப் பார்ப்பதனையும் கேட்பதனையும் உறுப்பினர்களுக்குஇயலச்செய்கின்ற நீதிமன்ற அறை என்று பொருளாகும்;

"கடத்துகை" என்பது, தனியோர் உருவத்தின், ஓர் அசைகின்ற உருவத்தின் அல்லது ஏதேனும் ஒலியின் இலத்திரனியல் வழிவகைகளின்மூலமான ஏதேனும் கடத்துகை என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக் கத்துக்கான முதலாம் அட்ட வணையைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, அதன் 39 ஆம் இலக்கப் படிவத்தை உடனடுத்து (ஓர் அழைப்புக்கட்டளைக்குக் கீழ்ப்படியாமைக்காகச் சாட்சிக்கெதிரான பிடியாணையின் படிவம்) பின்வரும் புதிய படிவங்களை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது: -

**"இல. 39அ**

**சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியை விசாரணைசெய்தலை ஒருங்கிணைப்பதற்கான ஆணை.**

[பிரிவு 167ஆ (8)]

……………… மேல் நீதிமன்றத்தில்/மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கில. ……………………………………………………

……………………………
வழக்காளி

எதிர்.

……………………………
எதிராளி

……………………………… என்னுமிடத்தைச் சேர்ந்த (ஆணையாளராக நியமிக்கப்பட வேண்டிய ஆளின் முகவரி) …………………………………… என்பவருக்கு (ஆணையாளராக நியமிக்கப்படவேண்டிய ஆளின் பெயர்)

மேலே மகுடப்பெயரிடப்பட்ட வழக்கு, …………………… சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் (ஏற்புடையபாலதான சட்டம்) ……………………… க்காக (வழக்கின் தன்மை) மேலே பெயர்குறிப்பிடப்பட்ட எதிராளிக்கு (எதிராளிகளுக்கு)

எதிராக மேலே பெயர்குறிப்பிடப்பட்ட வழக்காளியினால் தொடுக்கப்பட்டுள்ளதாதலாலும்.

கீழே குறிப்பிடப்பட்ட சாட்சியின் சான்று, தொலைவுப்புள்ளியொன்றிலுள்ள ஓர் அமைவிடத்திலிருந்து சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அளிக்கப்படலாம், பதியப்படலாம் அல்லது சாட்சியொருவரின் விசாரணை நிறைவேற்றப்படலாம்/ செய்யப்படலாம் என வழக்குக்கான திறத்தவர்கள்/ வழக்காளி/ எதிராளி நீதிமன்றத்துக்குப் பிரேரித்துள்ளனராதலாலும்/ நீதிமன்றம் அதன் சொந்தப் பிரேரணையின்மூலம் அதிகாரமளிப்பதற்கு முடிபுசெய்துள்ளதாதலாலும்.

சாட்சியின் பெயர் : ..................................................

தேஅஅ/கடவுச்சீட்டு இல.: ..........................................

முகவரி: ..................................................................

தொடர்பு விபரங்கள் : ...............................................

அத்துடன் இந்நீதிமன்றம், பின்வரும் தொலைவுப் புள்ளியிலுள்ள நீதிமன்றப்புள்ளியுடன் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக மேற்கூறப்பட்ட சாட்சியை விசாரணைசெய்தலை ஒருங்கிணைப்பதற்கு ஆணையாளராக உங்களை நியமித்துள்ளதாதலாலும். தொலைவுப்புள்ளியின் முகவரி :....................................

இந்நீதிமன்றத்தினால் அறிவிக்கப்படவேண்டிய தேதியிலும் நேரத்திலும் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக மேற்கூறப்பட்ட சாட்சியை விசாரணை செய்தலை ஒருங்கிணைக்கும்படியும் பொருளளவில் இதனோடிணைந்துள்ள 39இ என்னும் இலக்கப் படிவத்தில் ஒரு சத்தியத்தை அல்லது உறுதியுரையைச் செய்து கையொப்பமிடும்படியும் அல்லது மொழிந்து கையொப்பமிடும்படியும், சான்றளித்தல் பூர்த்திசெய்யப்பட்டதன்மேல் 14 நாட்களினுள் அத்தகைய சத்தியத்தின் அல்லது உறுதியுரையின் பிரதியொன்றையும் அத்தகைய சத்தியத்தின் அல்லது உறுதியுரையின் மூலப்பிரதியையும் இலத்திரனியல் வழிவகைகள்மூலம் இந்நீதிமன்றப் பதிவாளருக்கு ....................... இனூடாக (பதிவாளரின் மின்னஞ்சல் முகவரி) நீதிமன்றத்துக்கு உடனடியாகத் திருப்பியனுப்பும்படியும் உங்களுக்கு இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

............................ ஆம் ஆண்டு .................... மாதம் ......... ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
கைெயொப்பமிடப்பட்டது.................…
பதிவாளர்

என்னால் வரையப்பட்ட ஆணை,

(வழக்காளியின்/எதிராளியின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி)

## இல. 39ஆ

**(இலங்கையினுள்ளான தொலைவுப்புள்ளியிலுள்ள ஆணையாளருக்கான ஆணையைச் சேர்ப்பித்தல்) சமகாலத்துக்குரிய கட்புல - செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரை விசாரணைசெய்தலை ஒருங்கிணைப் பதற்கான ஆணையைச் சேர்ப்பித்தல்**

[பிரிவு 167ஊ (1) (அ)]

..................... மேல் நீதிமன்றத்தில்/ மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கில. ..........................................

.........................................
வழக்காளி

எதிர்.

.........................................
எதிராளி

.................................... என்னுமிடத்தைச் சேர்ந்த (ஆணையாளரின் முகவரி) ......................................... என்பவருக்கு (ஆணையாளராக நியமிக்கப்படவேண்டிய ஆளின் பெயர்).

கூறப்பட்ட தேதியிலும் நேரத்திலும் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகக் கீழே குறிப்பிடப்பட்ட சாட்சியின் விசாரணையை ஒருங்கிணைப்பதற்கு உங்களுக்கு இத்தால் ஆணை வழங்கப்படுகின்றது :

சாட்சியின் விபரங்கள் :
பெயர் : ..................................................................
தேஅஅ/கடவுச்சீட்டு இல. :..........................................
தொலைவுப்புள்ளியின் முகவரி:...................................
தொலைவுப்புள்ளியின் தொடர்பு விபரங்கள்: .................

விசாரணையின் தேதியும் நேரமும்:
.................................................................
நீதிமன்றப்புள்ளியின் தொடர்பு விபரங்கள்:
.................................................................
இணைக்கப்பட்ட ஆவணங்கள்:
.................................................................

நீதிமன்றக் கட்டளைப்படி
கையொப்பமிடப்பட்டது…....……………...
பதிவாளர்

**இல. 39இ**

**(இலங்கைக்கு வெளியேயான தொலைவுப்புள்ளியிலுள்ள ஆணையாளருக்கான ஆணையைச் சேர்ப்பித்தல்) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரை விசாரணைசெய்தலை ஒருங்கிணைப்பதற்கான ஆணையைச் சேர்ப்பித்தல்**

[பிரிவு 167ஈ (1) (ஆ)]

பணிப்பாளர்/சட்டப் பிரிவு,
வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 01.

**இலங்கைத் தூதரகத்தின்/உயர் ஸ்தானிகராலயத்தின்/ காவற்றூதலலுவலகத்தின் இராஜதந்திர அலுவலரொருவருக்கு அல்லது மத்திய அதிகாரசபையினூடாகப் பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவருக்கு ஆணையைச் சேர்ப்பிப்பதற்கான கோரிக்கை தொடர்பாக.**

......................................இலுள்ள இலங்கைத் தூதரகத்தின்/ உயர் ஸ்தானிகராலயத்தின்/ காவற்றூதலலுவலகத்தின் உரியமுறையில் நியமிக்கப்பட்ட இராஜதந்திர அலுவலருக்கு அல்லது மத்திய

அதிகாரசபையினூடாகப் பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்கு இணைக்கப்பட்ட ஆணையை ஆவணங்களுடன்சேர்த்துச் சேர்ப்பிக்கும்படியும் இப்படிவத்தின் பிரதியை ………………. நீதிமன்றத்துக்கு, சேர்ப்பிப்புப்பற்றிய கூற்றொன்று இதன்மீது புறக்குறிப்பிடப்பட்டும் இலங்கை, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சட்டப்பணிப்பாளரினால் கைபொப்பமிடப்பட்டும் திருப்பியனுப்பும்படியும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சட்டப் பணிப்பாளர் கோரப்படுகின்றார்.

…………………......மேல் நீதிமன்றத்தில்/ மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கில. ……………………………………………………

……………………………………..
வழக்காளி

எதிர்.

……………………………………..
எதிராளி

………………………………. என்னுமிடத்தைச் சேர்ந்த (ஆணையாளரின் முகவரி) …………………………………… என்பவருக்கு (ஆணையாளராக நியமிக்கப்படவேண்டிய ஆளின் பெயர்) கூறப்பட்ட தேதியிலும் நேரத்திலும் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகக் கீழே குறிப்பிடப்பட்ட சாட்சியை விசாரணை செய்தலை ஒருங்கிணைப்பதற்கு உங்களுக்கு இத்தால் ஆணை வழங்கப்படுகின்றது.

சாட்சியின் விபரங்கள்:
பெயர் :…………………………………………………………
தே.அ.அ./கடவுச்சீட்டு இல : …………………………………
தொலைவுப்புள்ளியின் முகவரி : ……………………………
தொலைவுப்புள்ளியின் தொடர்பு விபரங்கள் : …………….
விசாரணையின் தேதியும் நேரமும் : …………………………
நீதிமன்றப்புள்ளியின் தொடர்பு விபரங்கள் : ………………
இணைக்கப்பட்ட ஆவணங்கள் : ……………………………

நீதிமன்றக் கட்டளைப்படி
கையொப்பமிடப்பட்டது ……...……..
பதிவாளர்.''

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது